# ஞான குரு

மாசி 6 மலர்

புரவர் 1954

DIGITIZED

ஜட •
Om 21195, N48 GG
N54.6.9
207940



1330.
4 54
1413

# வைகுண்ட ஏகாதசி

ஸ்மார்த்த ஏகாதசி:-
4—1—1955 செவ்வாய்க்கிழமை.

வைஷ்ணவ ஏகாதசி:-
5—1—1955 புதன்கிழமை.

**விலை 6 அணா.**




பிரசுரிப்பாளர்கள்:—
"ஞானகுரு" பதிப்பகம்,
5, கான்பாளையம் 3-வது தெரு, மதுரை (S. I.)

# " ஞான குரு "

தமிழ் மாதம் முதல்தேதி தோறும் வெளிவரும் தெய்வீக மாதப்பத்திரிகை. அணு 6.

இந்தியா வருடச்சந்தா ரூ. 3. எந்த மாதத்திலிருந்தும் சந்தா சேரலாம். சிலோன், சிங்கப்பூர், பினங்கு முதலிய வெளிநாடு ரூ. 4. வி. பி. கிடையாது. சந்தா மணியார்டர் செய்க.

☞ ஞானகுரு வெளியாகும் தேதியில், தனியாக ஜன்மராசிப் பலன் மாத்திரம் விளம்பரங்களுடன் ஞானகுரு ஜன்மராசி அநுபந்தம் என்ற பெயரில் வெளியாகும். விலை அணு 2. அநுபந்தத்திற்கு வருட சந்தா ரூ. 1-8-0.

விளம்பர விகிதம்:— உள் பக்கம ரூ. 20. ½ பக்கம் ரூ. 10. ¼ பக்கம் ரூ. 5. ராப்பர் வெளிப்பக்கம் ரூ. 50. ராப்பர் உள்பக்கம் ரூ 40.

"ஞானகுரு" விசேஷ போஷகர்கள்:- *மதுரை, ஸ்ரீ* V. S. M. *இராஜாராமய்யர், ஸ்ரீ* M. R. *வித்தியாசாகர், ஸ்ரீ* V. S. M. *மோஹன்ராம், பழநி, ஸ்ரீலஸ்ரீ ஸாது ஸ்வாமிகள். (விசேஷ போஷகர் தொகை ரூ. 501.)*

"ஞானகுரு" சாதாரண போஷகர்கள்:— *சாதாரண போஷகர் தொகை ரூ. 101 செலுத்தியவரின்* குண விசேஷங்களைப்பற்றி ஒரு பக்கம் பிரசுரிப்பதன்றி, மாதாமாதம் அவருடையபெயர் ஞானகுருவில் பிரசுரிக்கப்படும்.

*ஆசிரியர்:—* S. G. இராமலிங்கம், B. A., *சொற்பொழிவாளர்.*

" ஞானகுரு " ஆபீஸ், 5, கான்பாளையம் 3-வது தெரு, *மதுரை.*

Editor:- S. G. RAMALINGAM, B. A.,

**"GNANA GURU" Office, 5, Khanpalayam 3rd St., MADURAI.**

---

கூடிய சீக்கிரம் வெளிவரும்! முந்துங்கள்! முன் பணம் அனுப்புங்கள்!

ஹிருஷிகேஸம், சுவாமி சிவானந்தர் அவர்கள் எழுதிய Advice to Women என்ற ஆங்கில நூல் மொழிபெயர்ப்பு.

# பெண்மணிகளுக்குப் பொன்மொழிகள்!

('ஞானகுரு' ஆசிரியர் தமிழாக்கியது.)

*இந்நூல் கிரவுன் 1×16 அளவில் கிளேஸ் காகிதத்தில் சுமார் 200 பக்கங்களில் கனத்த அட்டைப் பைண்டுடன் பிரசுரிக்கப்படும்.*

விலை ரூ. 2—8—0. தபால் சிலவு 12 அணு.

☞ 1—1—1955 தேதிக்குள் முழுத்தொகையும் *அனுப்புவோர்க்கு* ஒரு பிரதிக்கு தபால் சிலவுள்பட ரூ. 2-12-0 ஆகும்.

மணியார்டர் அனுப்பவேண்டிய விலாசம்:—

மானேஜர், "ஞானகுரு" *பதிப்பகம்,* (முன் பணம்)

5, கான்பாளையம் 3-வது தெரு, மதுரை. (S. I.)

---


செந்தமிழ்நாட்டுச் செல்வச் சிறுவர்களுக்கு திடகாத்திரமளிக்கும் சிறந்த உணவு

எங்கள் ராஜா பார்லி பிஸ்கட்.

ஸ்தாபிதம் 1926

போன் நிர். 334.

ராஜா பார்லி பிஸ்கட்ஸ்

குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்.

நேம் அன் டிசைன் ரிஜிஸ்டர் நிர். 143106.

**ராஜா பிஸ்கட் கம்பெனி, 115, திண்டுக்கல் ரோடு, *மதுரை.***

கிளை:— மெயின் ரோடு, *திண்டுக்கல்.*

*ஏஜெண்டுகள்.*

| | | |
|---|---|---|
| ஸ்ரீ | A. *வெங்கிடொஜலமய்யர்* ... ... | *திருநெல்வேலி.* |
| ,, | S. *ஷண்முகக் கோனூர்* ... ... | *கோவில்பட்டி.* |
| ,, | A. S. *பாலையா நாடார்* ... ... | *சாத்தூர்.* |
| ,, | M. K. *அழகர்ராஜா* ... ... | *இராஜபாளையம்.* |
| ,, | V. A. *ரத்தினசாமி அன்* V. *பழனிச்சாமி* ... | *சின்னமனூர்.* |
| ,, | N. *அழகர்சாமி நாயுடு* ... ... | *ஸ்ரீவில்லிபுத்தூர்.* |
| ,, | K. V. D. & *சன்ஸ்* ... ... | *போடிநாயக்கனூர்.* |
| ,, | A. *முத்திருளாண்டி பிள்ளை, 3 லாந்தர் பக்கம்,* | *பெரியகுளம்.* |
| ,, | R. *சீனிவாச அய்யங்கார்* ... ... | *நத்தம்.* |
| ,, | K. *சுப்பையா பிள்ளை* ... ... | *மதுரை.* |
| ,, | S. P. K. *நடராஜன் செட்டியார்* ... ... | *மதுரை.* |
| ,, | M. R. N. *ஆச்சாரி* ... ... | *மதுரை.* |
| ,, | L. V. *ஷண்முகம் பிள்ளை, டவுன்ஹால் ரோட்,* | *மதுரை.* |

உரிமையாளர்: *ஆ. சங்கு பிள்ளை.*

---

உயர்ந்த ஸ்ரீ முருகன் ரெடிமேட் ஆடைகள்

பனியன், ஜவுளி ரகங்கள்,

SRI MURUGAN DRESS MFG CO. MADURA

காற்று தலையணை, & கொசு வலைகள்.


*ஏராளமாக ஸ்டாக் செய்து குறைந்த விலைக்கு விற்பனை செய்கிறோம்.*

தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்:-

# ஸ்ரீ முருகன் டிரஸ் ஸ்டோர்ஸ்,

**2 & 104, *அம்மன் சன்னதி,* மதுரை.**

கிளைகள்:- தஞ்சாவூர், கும்பகோணம் & காரைக்குடி.




## என். எம். பி.

## குளுகோ &

## பார்லி பிஸ்கட்ஸ்

குழந்தைகளுக்கு இணையற்ற உணவு

உரிமையாளர்:-

என். எம்.

பொன்னுச்சாமி பிள்ளை,

59, கோரிப்பாளையம், மதுரை.

பிராஞ்சு:-

20, தளவாய் அக்ரஹாரம்,

மதுரை.

## எங்கள் பிரசித்திபெற்ற தயாரிப்புகள்.

| | |
|---|---|
| பாரத் இங்க் | மாலா டாய்லட் பவுடர் |
| பாரத் மார்கிங் இங்க் | மாலா கண் மை |
| பாரத் ரப்பர் ஸ்டாம்பு இங்க் | சிபாகோ டாய்லட் பவுடர் |
| கேசரி இங்க் பவுடர் | குமாரி கண் மை |
| பாரத் நீலகிரி தைலம் | காமதேனு பிரஞ்ச் பாலிஷ் |
| காமதேனு நீலகிரி தைலம் | சிவபதி மருந்து |
| பாரத் டின்சர் அயோடின் | சிபாகோ இன்செக்ட் பவுடர். |
| பாரத் வாசனை சாந்து | |

*Manufacturers:—*

பாரத் இண்டஸ்டிரியல் ஒர்க்ஸ்,

32, மஹால் 5-வது தெரு, மதுரை.


20740.

மாலை 6 — மலர் 9
16—12—1954.

# ஞானகுரு

ஜயவருஷ
மார்கழிமீ 1உ

## பொருள் அடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| ஜாதக ஆயுள் ஆராய்ச்சி | 5 |
| கைவல்யோ பநிஷத் வியாக்யானங்கள் | 6 |
| தியானமும் வாழ்க்கையும் | 7 |
| விப்ரபந்து ஷஷ்டி அப்த பூர்த்தி திறைமொழி வந்தனவாழ்த்து இதழ் | 9 |
| ஸ்ரீமத் பகவத் கீதை வெண்பா | 11 |
| ப்ரபோத ஸுதாகரம் | 12 |
| பக்தி சாதன மார்க்கம் | 14 |
| சுக்கிரன் | 15 |
| ஜன்மராசிப்பலன் [கார்த்திகைமீ] ஞானகுரு அநுபந்தம் | |


## ஜாதக ஆயுள் ஆராய்ச்சி. (உதாரண ஜாதகங்கள்)

நமது ஞானகுரு தைமாத பொங்கல் மலரில் ஜாதக ஆயுள் ஆராய்ச்சி விஷயங்கள் உதாரண ஜாதகங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒவ்வொரு மாதமும் ஆயுள் ஆராய்ச்சி சம்பந்தமாக ஓர் ஜாதகம் உதாரணமாகக் கொண்டு பல காரணங்களை ஊகித்து எழுதப்படும். நேயர்கள் தங்களுக்குத் தெரிந்த புதிய கருத்துக்களையும் எமக்கு எழுதித் தெரியப்படுத்தலாம்.

ஞானகுரு பொங்கல் மலரில் 10 உத்தர அக்ஷாம்சங்கொண்ட மதுரை ஜில்லாவுக்கு உபயோகமாகும்வண்ணம் தினசரி 12 லக்னங்கள் ஆரம்ப முடிவு காட்டும் கணிதம் தைமாதம் பூராவுக்கும் வெளியாகும்.

ஜோதிஷம் கற்றுக்கொள்ள சுலபவழி என்ற தலைப்பில் பல விஷயங்கள் வெளியாகும். பொங்கல் மலர் விலை நாலணா. இன்றே ஐந்தணாவை மணியார்டர் செய்யுங்கள். ஸ்டாம்புகள் கூடா.

## ரிஷிகேஸ், சுவாமி சிவானந்தரின் ஆங்கில நூல் மொழிபெயர்ப்புகள்:-

(1) சிவானந்தர் போதனா விளக்கம் அணா 6. (2) மௌனமும் மதச் சின்னங்களும் ஞானமுத்துக்களும் அணா 12. ஷை 2 நூல்களும் விலை ரூ. 1. தபால் செலவு அணா 8. ரூ. 1—8—0 M. O. செய்க. வி. பி. இல்லை. போஸ்டல் ஆர்டர், ஸ்டாம்புகள் கூடா.

"ஞானகுரு" பதிப்பகம், 5, கான்பாளையம் 3-வது தெரு, மதுரை. (S. I.)

## செய்தி.

சுவாமி சின்மயானந்தர் அவர்கள் டில்லி யக்ஞம் வெற்றிகரமாக நடத்திய பின்னர், 15-12-54உ முதல் சென்னையில் 41 நாள் வரை யக்ஞம் நடத்துவாரென்று செய்தி கிடைத்துள்ளது. தற்சமயம் சுவாமிகள் தங்கியிருக்கும் விலாசம்:—

காரியதரிசி, இரண்டாவது சென்னை யக்ஞம், 10, ராமானுஜம் தெரு, தி. நகர், சென்னை.

# ஈஸவாஸ்யோ பநிஷத் வியாக்யானங்கள்.

சென்ற கார்த்திகை மலர் தொடர்ச்சி.

இங்ஙனம், அபாரமான நுண்ணறிவினாலும், சிந்தனையில் தவறாத நேர்மையினாலும் மஹத்தான தர்க்க சாஸ்திர ரீதியிலே நமது மகரிஷிப் பெருமக்கள் 'அநுபவிக்கப்படுபொருள்' 'அநுபவம்' ஆகியவற்றுக்கும் மேலாக 'அநுபவிக்கிறவன்' அரசனாக அமைந்துள்ளான் என்ற கோட்பாட்டிற்கு வந்தார்கள். 'செயப்படு பொருளும்' கர்த்தாவிற்கும் செயப்படு பொருளுக்குமுள்ள தொடர்பும் இருந்து இயங்க வேண்டுமானால், மெய்யுணர்வு எனும் கோட்பாடான கர்த்தா இருந்தால்தான் முடியும். ஆகையால் அவர்கள் கர்த்தாவைப் பற்றியும் உலகத்தைப்பற்றியும் ஆராய்ந்து அவற்றின் தன்மை, அமைப்பு, இயக்கம் முதலியவற்றைக் கண்டுபிடிப்பதில் முனைந்தார்கள்.

ஹிந்து தத்துவத்தைப் படித்த ஐரோப்பியர்கள் மட்டுமல்ல; இந்தியாவில் தெய்வாதீனமாகப் பண்டிதர்கள் என்று அழைக்கப் படுகிறவர்களும்கூட ஹிந்து தத்துவத்தின் அந்தர்முக நிலையைப் பற்றி அடிக்கடி அவதூறு பேசுகிறார்கள். "கீழைத் தேசங்களிலே கடவுள்களும் புரோகிதர்களும் வெளி உலகத்தில் என்ன நடந்தாலும் அதைக் கவனிக்காமல் அந்தர்முகமாய்த் திருஷ்டியைச் செலுத்துகிறார்கள்" என்று கூறுகிறார்கள். மூல சாஸ்திரத்தில் உபதேசிக்கப்பட்ட வேதாந்த நூலைப்பற்றி குணதோஷம் பேசவில்லை; ஆனால் ஹிந்து மதாச்சாரம் க்ஷீணித்த நிலையில் இருக்கும் தற்கால வேதாந்தத்தையே அவர்கள் குறை கூறுகிறார்கள். இதெல்லாம் அவர்களுக்குத் தெரியாது.

இன்று முன்னிருந்த அதே மூலாதாரக் கோட்பாடுகள், மலட்டுத்தனமும் சோம்பேறித்தனமும் வாய்ந்த அழுகிப்போன சகதியிலே நசித்துப்போவதற்கே திறமையற்ற சமுதாயத்திற்கு ஓர் காரணமாக அமைகின்றன. இத்தகைய சோம்பேறித்தனமான வாழ்க்கையை வேதாந்தம் யூகமாகவோ அல்லது வெளிப்படையாகவோ ஒருபோதும் போதித்ததே கிடையாது. ஹிந்து உபநிஷத்துக்களிலே இத்தகைய பொருளை அரபியக் கதைகளை எழுதிய ஆசிரியர்கூட கண்டுபிடித்திருக்க மாட்டார். தனது வசதிக்கேற்ப 'சாத்தான் விவிலிய நூலை வாசித்தது போலிருக்கிறது' இது.

தற்கால கோட்பாட்டிற்கு நாம் வருவோமாக. இங்ஙனம் கர்த்தாவானது அபாரமான முக்கியத்வம் பெறுகிறபடியால் வாழ்க்கை சம்பந்தமான சாஸ்திரீய விசாரணை நடத்துவதற்கு இக் கர்த்தாவைப் பற்றிய ஆராய்ச்சியே உறுதுணையாகிறது. இங்ஙனம் ஆராயும் போது, ஒவ்வொருவரும் ஒரே ஒரு முழுத்தன்மை வாய்க்



# தியானமும் வாழ்க்கையும்.

சென்ற கார்த்திகை மலர் தொடர்ச்சி.

## 5. சூக்ஷ்ம சரீரத்தில் பிரவேசித்தல்.

ஞானயோகி ஒருவன் உணர்வோடுகூடிய பூரணமாகத் தளர்த்துதல் என்ற பயிற்சி நுணுக்கத்தின் மூலமாக, எப்படி வெளி உலகத்து இந்திரிய நுகர்வுப் பொருள்களினின்று மெதுவாகவும் முறையாகவும் தன்னை விலக்கிக்கொண்டு, தனது ஸ்தூல தேகத்திலிருந்தவாறே தனது கவனத்தைத் திருப்பிக்கொள்கிறான் என்பதைப்பற்றி நேற்று நாம் விளக்கினோம். தியானிக்கிறவன் எந்த அளவுக்கு தளர்த்திக்கொள்ள முடிகிறதோ அந்த அளவுக்குத் தனது ஸ்தூல சரீரத்தினின்று வெளிக் கவர்ச்சிகளையெல்லாம் சுலபமாக நீக்கிக்கொள்ள முடிகிறது. தளர்த்துதல் என்பது ஓரளவு வெற்றிகரமாக இருந்தாலுங்கூட, ஒருவன் தனக்குள்ளாகவே கலக்கமுற்ற உள்ளங்கள் எனும் பாலைவனங்களினின்று வீசுகிற கடும் புயல்களுக்குப் புகலிடமாக குளிர்ந்ததோர் பர்ணசாலையின் அமைதியையும் ஆனந்தத்தையும் தழுவி அநுபவிக்கக்கூடும்.

ஒரு பிரச்னையிலிருந்து வெளியே வருவதற்கு ஒரே ஒரு மார்க்கம் உண்டு. அதாவது, அப்பிரச்னைக்கு மேலே எழுவது தான் மார்க்கம் என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். பிரச்னைக்குள்ளிருக்கிறபோது எந்தவிதப் பிரச்னையையும் தீர்க்கமுடியாது. சூழ்நிலைகளின் தொடர்பினால் ஓர் பிரச்னை சிருஷ்டிக்கப்படுகிறது. அத்தொடர்பினின்று நாம் விலகத் தயாராயிருக்காத

---

தவர் போன்று நடந்துகொள்ளவில்லை. ஆனால் நாம் ஒவ்வொருவரும் பல்வேறுதலை கொண்ட வஸ்துவாகவே பாவித்துக்கொள்கிறோம். நம்மில் ஒவ்வொருவருக்குள்ளும் மூன்று அல்லது நான்கு பண்பாட்டுருவங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஜீவவர்க்க நூலின் பிரகாரம் ஒரே ஒரு பிராணியாக இருப்பினும், நமக்குள் நான்கு முக்கிய உருவங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வஸ்துவாக விளங்க முயலுகிறது.

ஒருவனிடத்தில் ஸ்தூல சரீரம், சூக்ஷ்ம சரீரம், காரண சரீரம், ஆத்மீய உருவம்—என நான்கு பண்பாட்டுருவங்கள் உண்டு. ஒவ்வொரு பண்பாட்டுருவமும் பல எண்ணங்களையும் ஆசைகளையும் உணர்ச்சிகளையும் கொண்டு தன் கோட்பாடுகளில் ஈடுபட்டுத் தளைகளை அறுத்துத் தப்பித்துக் கொண்டு சுதந்திரம், அமைதி, ஆனந்தம் ஆகிய பெயரில்லாத நிலைகளைப் பெறுவதற்குக் கூடுமான வரையில் எத்தனித்துக்கொண்டே இருக்கின்றன. (தொடரும்)

வரையில், பிரச்னை எப்போதும் தீராது. உடல் உணர்விலே சிதறுண்டு போகிற கவனங்களாகிய பிரச்னையானது அதினின்று விலகினால்தான் முடியும். இந்த நுணுக்கத்தைப்பற்றி ஸ்ரீ கிருஷ்ண பகவான் கீதையில் தாமே விளக்கியுள்ளார்.

உடல் துறையினின்று அப்பால் விலகுதல் என்பது மனோமய, அறிவுமயப் பிராந்தியங்களில் உணர்வோடு பிரவேசித்தலால் சித்தியாகும். ஒருவன் தனது உணர்ச்சிகளிலோ எண்ணங்களிலோ ஆழ்ந்திருக்கும்போது அவன் தன் உடலை மறக்கிறான். இது சாதாரண அநுபவம். தேர்தல் நடக்கும்போது, ஆடம்பரப்பிரியமானவனுங்கூட, ஓர் அபேக்ஷகர் என்ற ஹோதாவில் வெயிலையும் காற்றையும் பாராது உடலைத் திரணமாக மதித்து அங்குமிங்கும் நடமாடுகிறான். தான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற உற்சாகத்திலே, அவன் தனது மனோமய, புத்திமய உருவங்களுடன் நெருங்கி வாழும் அளவுக்குத் தனது உடலையே திரஸ்கரிக்கின்றவனாகிறான்.

ஆத்மீயப் பயிற்சிகளிலே பழகி, தியானிக்கிறவன் தனது மனோமய புத்திமயத் துறைகளிலே மிகவும் நெருங்கி ஈடுபடுகிறபடியால், தனது ஸ்தூல தேகத்தினின்று கவனம் முழுதையும் அடியோடு உணர்வுடன் அகற்றக் கற்றுக்கொள்கிறான். இறைவனின் திருவுருவத்தைத் தியானித்தல், ஜபம் பண்ணுதல் ஆகிய நுணுக்க வழிகளால் ஆத்மீய சாதகன் தனது சூக்ஷ்ம தேகத்திலே மேலும் மேலும் ஊன்றியிருந்து தன் உடலையும் சூழ்நிலைகளையும் தற்காலிகமாவது முற்றிலும் மறந்தவனாகிறான்.

சூக்ஷ்மதேகம் நான்கு வெவ்வேறு அலுவல்களைச் செய்து வருகிறதென்று நமது சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. சந்தேகங்கள் அல்லது உணர்ச்சிகள் கொண்ட துறையிலே சூக்ஷ்ம உடலானது தங்கி இயங்கும்போது, அதை 'மனம்' என்று அழைக்கிறோம். அதே மனோவஸ்து திடமாய் தீர்க்கமாய்த் தீர்மானிக்கிற அம்சமாக இயங்கும்போது அதற்கு புத்தி என்கிறோம். மனப்பிராந்தியத்திலே எழும் சந்தேகங்களும், அச்சந்தேகங்களின் முடிவாகிய தீர்ப்புகளும் நமக்குப் பிரகாசமாய் விளங்காத வரையில் அவைகளை அநுபவிக்க இயலாது. ஆனால் நமது எண்ணங்களை நாம் அறிகிறோம். ஒவ்வொரு மனப்பிரச்னைக்கும் ஒவ்வொரு தீர்ப்புக்கு வருகிறோம். மனப்பிராந்தியத்திலே ஒளி தத்துவமாக விளங்குவது சித்தம் அதாவது புத்தியின் உணர்வுத் தோற்றம்.

நமது எண்ணங்களும் புத்திபூர்வமான தீர்ப்புகளும் ஜ்வலித்தாலுங்கூட ஒருவனுக்கு இவை முற்றிலும் பூரணமான அநுபவத்தைத் தாராது, அவை நம்முடன் கூட்டுறவு கொண்டாலன்றி.

(தொடரும்)

# விப்ரபந்து ஷஷ்டி அப்த பூர்த்தி.

**7—11—54உயன்று நடைபெற்ற ஷஷ்டி அப்த பூர்த்தி விழாவை முன்னிட்டு 14—11—54உயன்று மதுரை ஸௌராஷ்ட்ர பெண்கள் ஹைஸ்கூலில், சமூக அக்ரகண்யரும் ஸௌராஷ்ட்ர பதியுமான தார்மீக ஸார்வபௌம பிரஹ்மஸ்ரீ K. M. S. லக்ஷ்மணய்யர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற விசேஷ பொதுக்கூட்டத்தில் தானசீல தாதாக்களாகிய பிரஹ்மஸ்ரீ P. N. S. K சீதாராமய்யர், பிரஹ்மஸ்ரீ S. R. நரசிம்மாச்சாரியார் அவர்களால் மதுரை, ஸௌராஷ்ட்ர விப்ரபந்து ஸ்ரீ து. வே. பத்மநாபய்யர் அவர்களுக்கு வாசித்தளிக்கப்பட்ட**

## நிறைமொழி வந்தன வாழ்த்து இதழ்.

அறிவிலும் ஆற்றலிலும் அதிசய நிலைகளில் அதிநுட்பமாய் அரிய கருத்துக்களைச் சொருகி இயல் இசை நாடகமென்னும் முத்தமிழில் சிறந்திலங்கியது போல், நம் ஸௌராஷ்ட்ர பாஷையிலும் புலமை பெற்று, தன்னுடைய பண்பு, அன்பு, அடக்கம், ஒழுக்கம் முதலிய நற்குணங்களால் யாவரையும் கவர்ச்சி செய்து ஸமூகமென்னும் தெப்பத்தை நடத்துவதற்கு அதன் மாலுமி போன்று விளங்கும் உத்தமரே!

ஸமூகம், ஸமூக மக்கள், பிரமுகர்கள், கனவான்கள் முதலியவர்களின் விசேஷ வைபவங்களின் சந்தர்ப்பங்களைக் கைநழுவவிடாது பங்கெடுத்துக்கொண்டு தக்க தருணங்களில் தங்களது அரிய உயரிய நோக்கங்களும் கருத்துக்களும் ஆலோசனை யென்னும் ஆபரணத்தைச் செதுக்கி, அதன் ஒளியைப்பிரகாசிக்கும்படி எல்லா மக்களிடமும் விநியோகம் செய்திருக்கிறீர்கள். இவ்வரிய குணாதிசயங்களினால் ஸமூகப்பற்றை வளர்க்க மேன்மையான ஆத்மபல ஆயுதமாகக் கொண்டிருக்கிறீர்கள்.

இன்னும் தங்களது ஜீவிய வாழ்க்கையே ஸமூக வாழ்க்கையாகக்கொண்டு உடல், பொருள், ஆவி இம்மூன்றையும் அர்ப்பணம் செய்திருக்கிறீர்கள்.

ஸமூக மஹான்கள், பெரியவர்கள், கவிசிரேஷ்டர்கள், ஸங்கீத வித்வான்கள் முதலியவர்களின் வரலாறுகள், சரித்திரங்கள், காவியங்கள், கீர்த்தனைகள், சுலோகங்கள் முதலியவைகள் மறைந்து கிடந்த புதைபொருள்களை தூரதிருஷ்டி யென்னும் அகக்கண்ணாடியின் சிந்தனா சக்தியால் புறப்பொருளாக்கி சிதறிக்கிடந்தவைகளை ஒன்றாகச் சேர்த்து, பல புத்தகங்கள் ரூபமாக வெளியிட்டு மக்களின் கவனத்திற்குக் கொண்டுவந்தீர்கள்.

இம் மஹத்தான கைங்கர்யத்திற்கு நம் ஸமூகம் என்றென்றைக்கும் தங்களை மறவாமல் கடமைப்பட்டிருக்கிறது. ஸமூக க்ஷேம நலங்கருதி உலக மேதைகளின் தோழமையையும் கொண்

டிருக்கிறீர்கள். இன்னும் தங்களது சேவைகள் மஹத்தானதும், அபாரமானதும், எண்ணிலடங்காததுமாகும். யாவற்றையும் விவரிக்க இவ்விதழ் இடந்தராததைப்பற்றி அஞ்சி விடுகின்றோம்.

எவ்வகையில் பணி செய்தால் ஸமூகம் ஒளி வீசும் என்ற கலையை பூரணமாகவும் தீர்க்கமாகவும் உணர்ந்த உயரிய உத்தம புண்ணிய சீலராகிய, விப்ரபந்து கு. வெ. பத்மநாபய்யர் அவர்களே! தங்களது அறுபதாண்டு நிறைவு நன்னாளாகிய இன்று, நாம் அனைவரும் ஆனந்த ஸாகரமெனும் ஸமுத்திரத்தில் மூழ்கி மகிழ்ச்சியடைகின்றோம். இப்புனித நாளாகிய இத்தருணத்தில் நம் இருவர்கள் சார்பாகவும், விஜயம் செய்திருக்கும் பெரியவர்கள், சகோதர, சகோதரிகள் சார்பாகவும் நம் வந்தனங்களையும் வாழ்த்துக்களையும் உளங்கனிந்த அன்புடன் சமர்ப்பிக்கின்றோம்.

ஏற்கனவே கலைமகள், மலைமகள் கடாட்சம் பெற்ற தங்களுக்கு, அலைமகள் கடாட்சமும் பூர்ணமாகப் பெற்று, ஸமூகமென்னும் ஓடத்தை நடத்தவும், பணியாற்றவும், திடகாத்ராரோக்கியத்துடன் நீடூழி காலம் வாழவேண்டுமென்று இயக்கத்தவனை இறைஞ்சுகின்றோம்.

இப்பேர்ப்பட்ட மாணிக்கத்தை ஸமூகத்திற்கு அளித்த ஒளியிருள் சூழ்ந்த இப்பாருலகில் கண்காணாக் கானகத்திலும், கண்நுழையாக் காட்டகத்திலும், ஆழ்கடலிலும், வானத்திலும், முறையே வாழ்கின்ற, மரம், செடி, கொடி முதலிய தாவரவர்க்கங்களையும், ஊர்வன, தவழ்வன, நடப்பன, நீர் வாழ்வன, பறப்பன முதலிய ஜீவவர்க்கங்களையும், எல்லையற்ற வானத்தில் மிதக்கும், விண் மீன்களையும், எண்ணிலடங்காக் கோடான கோடி பிரம்மாண்டங்களையும் இயக்கி, தன்னிலடக்கி, வார்த்து வளர்த்துக் காத்து ரக்ஷிக்கும், நிராகார, நிர்குண பரவஸ்துவாகியும், வேத வேதாந்தங்களாலும், தேடியும் தேடிக்கொண்டும், உபநிஷத்துக்க்ளாலும் கோஷித்துக் கொண்டும், ஸாமகானத்தினால் கானம் செய்து கொண்டு மிருக்கப்பட்ட தவசிரேஷ்டர்களாலும், தேவர்களாலும் காண முடியாத அருமறைப்பொருளை, இதரவிஷயங்களற்று இடைவிடாச்சிந்தனையிலாழ்ந்து, தன்னை அந்தரங்க பக்தி செய்துகொண்டிருக்கும் பரம யோகிகளுக்கு எளிதில் சகுண மூர்த்தியாக கட்புலனுக்குத் தோன்றிக்கடாட்சிக்கும் பரம கருணாநிதியும், ஓம் என்ற பிரணவத்தால் ஒலித்துக்கொண்டிருக்கும் வேத நாயகனான பறவையேறு பரம புருடனின் பாதார விந்தங்களை நம் இருதய கமலத்தின் சிந்தையில் நிறுத்திப் போற்றிப் புகழ்ந்து பிரார்த்திக்கின்றோம். சுபம்.

தங்களன்புள்ள,

P. N. S. K. SEETHARAMIER.
S. R. NARASIMHACHARI.

# ஸ்ரீமத் பகவத் கீதை வெண்பா

(மதுரை, தோ. ரா. ப. அவர்கள் எழுதியது)

பதினொன்றாவது அத்தியாயம். (கார்த்திகை மலர் தொடர்ச்சி.)

18 கேடில் பரனே கிளர்ஞானத் துட்பொருளே
தேடி யடையும் புகலிடமே — நீடறங்கள்
காத்தவனே கண்ணா சநாதனனே என்றென்றும்
ஏற்றுவனே உன்னை இனிது.

19 ஆதியிடை யந்தமிலாய் வீரியத்திற் கீறில்லாய்
சோதிக் கரம்பலவுங் கொண்டுள்ளாய் — ஆதித்தன்
சந்திரனை நேத்திரமாய் வெந்தழலே வாயாகத்
தந்தனையுன் சூடுலகிற் றான்.

20 நின்னுருவே யெவ்விடத்தும் நீக்கமறக் கண்டேன்யான்
மன்னுவான் பூமிக் கிடைவெளியும் — நின்னுருவின்
அத்புதமு முக்கிரமு மூவுலகுங் கண்டதனாற்
சித்தங் கலங்கினதால் நின்று.

21 தேவர்க ளொன்றாகிச் சேர்வதுவு மச்சமுடன்
சேவித்துக் கைகூப்பி நிற்பதுவும் — நாவினால்
சித்த ரிருடியரும் திவ்யநற் கீதங்கள்
பக்தியுடன் சொல்வதுவும் பார்.

22 உருத்திரா தித்தரும் சாத்யர் வசுக்கள்
மருத்துக்க ளோடுவிஸ்வ தேவர் — கருத்தமைய
கந்தருவர் யட்சர் அசுரருஷ் மாபரும்
அந்தமுள சித்தருமை யார்வமுடன் — சிந்தைக்
கினிமையென் றேபார்த்து ஆச்சரியத் தாலும்
மனமகிழ நோக்கிடுமால் மற்று.

23 பார்வைக் கடங்காப் பரமான நின்னுருவை
பார்த்திவ் வுலகம் பயந்ததுவே — நீர்வையாய்
நாணும் பயந்தேன் நயனம்வாய் கைகால்கள்
காணும் தொடைஉதரம் கோரமாய் — தோனும்
பயங்கரமாம் தந்தங்கள் பார்த்தெவர்தான் பொல்லாப்
பயங்கொள்ளார் உள்ள படி.

24 வர்ணம் பலவுடனே வானளாவி நின்றிடுவோய்
சொர்ணம்போல் ஜோதிசுடர் துன்னுவிழி — அண்ணலே
வாய்திறந்த நின்னுருவைப் பார்த்தென் மனோதிடமும்
ஏய திறமிழந்தேன் இங்கு.

(தொடரும்)

# ப்ரபோத ஸுதாகரம்.

சென்னை, பிரம்மஸ்ரீ N. பாலசுப்பிரமண்ய செட்டியார் அவர்கள் மொழிபெயர்த்தது.

## 5. மனோநிக்ரஹ ப்ரகரணம்.

(65) தன் பிறப்பிடத்திலிருந்து புறப்பட்டு கீழ்நோக்கிப் பாயும் ஆறானது, ஸமுத்திரத்துக்குச் சென்று கலந்துகொள்கிறது. அது பிறப்பிடத்திலேயே நிலையாக நிற்குமேயானால், அது ஸ்வயமாக ஸமுத்திரமாகிவிடாதா?

(66) இதுபோலவே மனதும் தான் பிறந்த இடத்தை விசாரணை செய்துகொண்டு தன்னில்தானே நிலைகொண்டு (நிலைத்து) வெளி விஷயங்களில் பாயாமல் இருக்கும் பக்ஷத்தில், அஃதே ஸ்வயமாய் ஆத்மாவாகிவிடாதா?

(67) கிணறு, பெரிய ஏரிகளிலே மழைக் காலத்திலே வெகு அதிக ஜலம் சேர்ந்திருப்பதனாலே அது உப்புக்கரைத்தாற்போலிருக்கிறது. ஆயினும், அதுவே வெய்யிற்காலத்தில் சுண்டி அற்ப அளவாகும்போது அதனுடைய ஜலம் இனிப்பாக மாறிவிடுகிறது.

(68) அதுபோல விஷய வாஸனைகளாலே நிறைந்துள்ள மனது, தமோகுணமுடையதாயும் பாவமயமாயும் ஆகிவிடுகிறது. வைராக்கியத்தினூடே விஷய வாஸனைகள் மெலிந்துவிடுமேயானால், மெதுமெதுவாக ஸத்வகுணத்தின் ஆவிர்ப்பாவம் உண்டாகிறது.

(69) எந்த விஷயத்தில் பற்றுதலைக்கொண்டு இந்த மனது சில பாஹ்யேந்திரியத்தினூடே ஓடிக்கொண்டிருக்குமோ, அந்த விஷயம் கிட்டாமற்போனால் ஏதோ தன்னிடத்திலிருந்து தொலைந்துவிட்டதைப்போல (பறிகொடுத்தாற்போல) துக்க சாகரத்தில் மூழ்கிவிடுகிறது.

(70) தனது அபீஷ்ட விஷயத்தைத் தேடுவதிலே அது (மனது) மலை, காடு, நகரம், துர்க்கம், கடக்கமுடியாத நதி, ஸமுத்திரம், மற்றுமெல்லாவிடங்களிலேயும் திரிந்தலைந்துகொண்டு முடிவிலே தேடியலைந்த விஷயம் கிட்டாமற்போனால், அவசமாகி துக்கக் கடலிலே மூழ்கிவிடுகிறது.

(71) காய்ந்த சுர குடுக்கையை வெகு வேகமுடன் தண்ணீரின் அடிப்பாகத்திலே அமுக்கிவிட்டாலும், அது உடனே தண்ணீரின் மேல் பாகத்துக்கே வந்து மிதக்கிறது. இதேபோல



தனது (ப்ரம்ம) சொரூபத்திலே பிரயத்தின பூர்வகமாய் அமுக்கிவைத்தாலும், சித்தமானது (மனது) அடிக்கடி வெளியே கிளம்பி ஓடுகிறது.

(72) இந்த பிறவியிலேயோ அல்லது சென்ற பிறவிகளிலேயோ சம்பாதிக்கப்பட்ட கர்மங்களாலே எந்தெந்த சுபா சுப பலன்கள் உண்டாகவேண்டுமோ, அவைகளெல்லாம் வேண்டாமலேயே தனக்குத்தானாகவே வந்து சேர்ந்துகொண்டிருக்கும்.

(73) கெட்டவழிகளிலே ஓடிக்கொண்டிருக்கும் சித்த ரூபமான பசுவை தடைப்படுத்துவதற்காக, ப்ரம்மதேவன் கழுத்துக்குக்கட்டி தொங்கவிடும் வைராக்கியமென்கின்ற ஒரே ஒரு கட்டையை அமைத்து வைத்திருக்கிறார்.

(74) தூங்கும்போது எந்த சுகம் உண்டோ அது விஷயங்களாலுண்டான சுகமா? ஒருக்காலுமில்லை. ஏனென்றால், சித்தமானது இந்திரிய கோளகங்களிலே இல்லாமலிருப்பதுவேதான் நித்திரை என்று சொல்லப்படுகிறது.

(75 & 76) வெளியே போகும் வழியில்லாமல் உயர்ந்த சுவர்களால் கட்டப்பட்ட வீட்டிலே அடைப்பட்டிருக்கும் சிங்கமானது வெளியில் பாய்ந்தோட பலவிதமான முயற்சிகள் எடுத்துக்கொண்டும், வெளியேறமுடியாமல் கடைசியாகக் களைப்புற்றுப் பெரும் பெரும் மூச்சுகளை விட்டுக்கொண்டு எப்படி வீழ்ந்து கிடக்குமோ, அதேவிதமாக எல்லா இந்திரியங்களையும் அடக்கிவிட்டபிறகு ஆயிரம் பிரயத்தினங்கள் பண்ணியும், தான் வெளியேறமுடியாது என்று அறிந்துகொண்ட மனம் சாந்தியடைந்து நிலையாக நின்றுவிடுகிறது. பிறகு அந்த மனம் யாதொரு அட்டகாசமும் செய்வதில்லை.

(77) ப்ராணத்தின் அசைவைத் தடுப்பதனாலேயும், ஸத்ஸங்கத்தாலும், வாஸனைகளை (எண்ணங்களை) அழிப்பதனாலும், பகவானுடைய பாதாரவிந்தத்தில் பக்தி செலுத்துவதனாலும், மனதானது சிறுகச்சிறுக தனது வேகத்தை விட்டொழித்துவிடுகிறது.

மனோநிக்ரஹ ப்ரகரணம் முற்றிற்று.

## 6. வைராக்கியப் பிரகரணம்.

(78) பிறத்தியாருடைய வீடு, மாடு, ஸ்திரீ, புத்திரர்கள், பொருட்கள், அந்த வீட்டுக்கு ஏதோ வேலையாக வந்துபோய்க்கொண்டிருக்கும். ஒருக்ஷண நேர நிவாஸிக்கு, அவைகளால் ஹர்ஷமாவது விஷாதமாவது உண்டாகுமா? (தொடரும்)

# பக்தி
## சாதனா மார்க்கம்.

ஸ்ரீமதி K. V. கங்காபாய், மதுரை.

(கார்த்திகை மலர் தொடர்ச்சி)

இதுபோல ஞான மார்க்கமாகிய தத்துவ வழியானது நல்ல மனிதனுக்கு வழிகாட்டி அவன் உன்னத லட்சியத்தையடைவதற்கு உதவி செய்வதுபோலவே, கெட்டவன் செய்யும் காரியங்களுக்கும் நியாயமெடுத்து உரைக்க முன் வருவதுபோலிருக்கின்றது. ஞான யோகத்திலுள்ள பெரிய ஆபத்து இதுதான். பக்தியோகமோ, இவ்வித ஆபத்துடன் கூடியதல்ல. இலகுவானதும் இனிமையும் மிருதுத்தன்மையும் பொருந்தியதாயிருக்கிறது. ஞான யோகியைப்போல் அவ்வளவு உன்னத வழிகளைப் பக்தன் பின்பற்றுவதில்லையாதலால் அவ்வளவு பெரிய படுகுழிகளும் இவனுக்கு கிடையா. எந்த வழியை ஒருவன் பின்பற்றினாலும் ஆத்மாவின் பந்தங்கள் முழுமையும் தெறித்து நீக்கினாலன்றி, ஒரு மனிதனுக்கு முக்தியாகிய சுதந்திரம் கிட்டாது என்பது நிச்சயமாயிற்றே. ஆதலால் அந்த மிருதுவான எளிய வழியைத் தேர்ந்தெடுத்துக்கொண்ட பக்தன் எவ்வாறு முக்திநிலை பெறுவான்.

18. பகவானுடைய கருணையை அடைந்த கோபிகளில் ஒருத்தியின் நிலைமையைச் சற்று கேளுங்கள். அவள் செய்த புண்ணிய பாபங்கள் எல்லாம் தீவிர பக்தியினால் தெறித்து நீங்குகின்றன. கடவுளைத் தியானிப்பதில் ஏற்படும் ஆழ்ந்த உற்சாகமாகிய சுகம் அவளுடைய நற்காரியங்களால் ஏற்படும் பந்தங்களை எடுத்துக்கொண்டது. தியானத்தால் அந்த கடவுளை அடையவில்லையே என்று பெரிய துக்கம் ஏற்படும்போது, அவளது ஜீவன் அடைகிற துன்பத்தால் அவளது பாவவிருத்திகளெல்லாம் நாசமாக்கப்படுகின்றன. இவ்வாறு எல்லாப் பந்தங்களும் நீங்கப்பெற்று அவள் முக்தியை அடைந்தாள். (ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் உள்ளது.)

19. துக்க ரூபமான உணர்ச்சிகளை எப்படி நாம் மேலே எழுப்பமுடியும் என்று ஒருவன் மயங்கக்கூடும். அது நிச்சயம் முடியும் என்றும் துக்கமும் நமக்குப் பயனை விளைக்குமென்றும் பக்தி யோகம் நமக்குப் போதிக்கிறது. ஒருவன் தனக்குத் தனமில்லையென்றோ, வேறு உலக சம்பந்தமான விஷயமில்லையென்றோ துக்கப்படுகிறான் என்று வைத்துக்கொள்வோம். அப்போது அவன் தவறான வழியில் தன் உணர்ச்சியைச் செலுத்துகிறான்.

(தொடரும்)

# சுக்கிரன்

“ஸ்ரீ”

207140

(கார்த்திகை மலர் தொடர்ச்சி)

வாரங்கட்குள் வெள்ளிக்கிழமை வெகு விசேஷம். சகல தேவ பூஜைகளுக்கும் எடுத்தது வெள்ளிக்கிழமை. எந்தக் கடவுளுக்கும் ஆஸ்தீகர்களும், வியாபாரிகளும், ஏனைய பக்தர்களும் பிரதி வெள்ளிக்கிழமைகளிலும் தவறாது பூஜைசெய்து தங்களால் இயன்ற நிவேதனஞ்செய்து மகிழ்வதை நாம் இன்றும் காண்கிறோம். குடும்பஸ்தர்கள் சுக்ரவாரத்தன்று சுமங்கலிகளை வீட்டிற்கழைத்து தாம்பூலம் சந்தனங்கொடுத்து மரியாதை செய்வது கண்கூடு. வெள்ளிக்கிழமை லக்ஷ்மீகரமானதல்லவா? ஆகவே, கிரஹலக்ஷ்மிகளாக விளங்கும் ஸ்திரீகளை அழைத்து மரியாதை செய்யவேண்டும். நாகரீகப் படிப்பினாலும், நடையுடை பாவனைகளாலும் (Modern Fashions and Educational Attainments) ஸ்திரீகள் ஸ்வதந்திரத்தையோ, ஆண்களுக்குச் சமதையாகவோ, மரியாதை நிரம்பிய ஸ்தான கௌரவத்தையோ அடைந்துவிட்டதாக இறுமாப்படைய முடியாது.

எப்பொழுதும் மூடியிருக்கும் வஸ்துவுக்குத்தான் மஹிமை அதிகம். எனவே, நாகரீக தோரணைகளுக்கு அடிமையாகாமல், வீட்டை நிர்வகித்து நடத்தி, கணவனின் சுகத்திற்குப் பாடுபட்டு, கர்வமின்றி, அடக்கமும் ஒடுக்கமும் நிரம்பிய குணமுடன் விளங்கும் கிரஹலக்ஷ்மிகள்தான் உண்மையான — நிரந்தரமான ஸ்வதந்திரமுடன் வாழ்கிறார்கள். கிரஹலக்ஷ்மிகளின் ஆனந்தமெங்கே? நாகரீகப் பெண்மணிகளின் ஜபருதஸ்தமெங்கே?

நமது முன்னோர்கள் வஞ்சகமின்றி ஸ்திரீகளுக்குப் போதுமான மரியாதையும், அந்தஸ்துமளிக்கும் வகையில் தங்களது சமூக திட்டங்களை வரையறுத்துள்ளனர். எனவே, பாரத தேசப் பெண்மணிகள் யாவரும் உத்தம கிரஹலக்ஷ்மிகளாக வாழவேண்டும். கணவனுக்குகந்தவர்களாகவும், வருங்கால யுவர் யுவதிகளின் பெருமைபெற்ற தாய்மார்களாகவும் வாழவேண்டும். “பெண்டிரில்லா வீடு பாழ்” என்ற பழமொழி பொய்யாமா? நமது பெரியோர் பெண்மணிகளுக்கு அளித்த கௌரவம் புலனாகிறதல்லவா?

— 2 —

சுக்ர பகவானுக்கு ஒரு கண் பார்வை கிடையாது என்று நாமெல்லோரும் அறிவோம். அவர் ஒரு கண் இழந்த வரலாற்றை கவனிப்போம்:—

நரஸிம்ஹ மூர்த்தியின் அனுக்ரஹம் பெற்ற பிரகலாதன் குலத்தில் பிறந்தவன் "மஹாபலி" என்ற அசுர சக்ரவர்த்தி. "ப்ருகு" என்ற மஹரிஷியின் வம்சத்திலுதித்த பிராமணோத்தமர்களாலும், குல குருவான சுக்ர பகவானது உபதேசத்தாலும், பலிச்சக்ரவர்த்தி "விஸ்வ ஜித்" என்ற பெரிய யாகமொன்றைச் செய்து முடித்தான். யாகத்தின் பயனாக வெளிவந்த அதியற்புதமான பலமுள்ள சதுரங்க சேனைகளைக்கொண்டு தேவலோகம், பூலோகம், பாதாள லோகம் ஆகிய மூன்று லோகங்களையும் ஜெயித்து ஏக சக்ராதிபதியாக விளங்கினான் பலி. அநேகம் அஸ்வமேத யாகங்களைச்செய்து தனது யோக பலத்தைப் பெருக்கிக்கொண்டு நிகரற்ற வீர்யமுடன் விளங்கி வந்தான்.

பலியின் ராஜ்யபாரத்தைப் பொறுக்காத இந்திரன் முதலான முப்பது முக்கோடி தேவர்களும், பிரஹஸ்பதியின் உபதேசத்திற்கிணங்கி, தேவலோகம் விட்டு வைகுண்டம் சென்று, மஹாவிஷ்ணுவிடம் தங்கள் குறைகளை முறையிட்டு, விமோசனம் கோரி பிரார்த்தனை செய்தனர்.

நிற்க, கச்யப பிரஜாபதி என்ற மஹரிஷியின் புத்திரர்களும் தேவதைகளுடன் மறைந்து செல்லவே, அவர்களைப் பெற்ற தாய் அதிதி தேவியார் வெகுவாகத் துக்கித்து, தபஸ் கலைந்து இல்லந்திரும்பிய கச்யப பிரஜாபதியிடம் முறையிட, தவமுனி விஷ்ணுவைப் பூஜித்தால் பலன் கிட்டுமெனக்கூறி, மனைவியான அதிதியம்மையாருக்கு மந்திரோபதேசஞ்செய்து ஆசி கூறினார்.

அதிதியின் அந்தரங்க தபசிற்கு மெச்சி, மஹா விஷ்ணு பிரத்யக்ஷமாகி, அவ்வம்மையாரின் கர்ப்பத்தில் பிறந்து வாமனாவதாரமெடுத்து மஹாபலியை ஜெயித்து தேவர்களின் க்ஷேமத்தை ஸ்தாபிப்பதாக வாக்குறுதியளித்து மறைந்தார்.

அதிதியின் வயிற்றில் விஷ்ணு வாமனாவதாரமெடுத்து, பிரம்ம தேவர், சதாசிவன் ஏனைய தேவர்களின் பக்க பலமுடன், மஹாபலியிடம் சென்று மூன்றடி மண் யாசித்து நின்றார். குல குருவான சுக்ராச்சாரியர் மஹாபலியிடம், வந்துள்ள வாமனர் மாயாவியான விஷ்ணு ஸ்வரூபமென்றும், எனவே பிக்ஷை தர மறுக்கவும் ஆக்ஞையிட்டார். "பாத்திரமறிந்து பிச்சை யிடு; உனது நாசத்தைத் தேடுமளவில் பிக்ஷையிட வேதம் உத்தரவு பிறப்பிக்கவில்லை" என்று எடுத்துக்கூறி, எச்சரிக்கை செய்தார்.

தன்னை நாடி வந்து பிக்ஷை கேட்போரை இல்லை எனாது வழங்கும் ஸ்வபாவமுள்ள மஹாபலி மனங்கோணாது, சுக்ராச்சார்யரின் வார்த்தையைக் கேளாது, பிக்ஷையிடப் பிரதானமான அர்க்கியமிட (பிக்ஷுவின் கையில் ஜலம் விட்டு சத்தியம் செய்வதற்கு 'அர்க்கியம்' என்று பெயர்) ஆயத்தமானான். (தொடரும்)

## ஞானகுரு அநுபந்தம்

## 1954ஆம் டிசம்பர்மீ 16உ முதல் 1955ஆம் ஜனவரி 13உ வரை. ஜன்மராசி நக்ஷத்திர பலன்கள். [ஜயஆம் மார்கழிமீ]

| | | | |
|---|---|---|---|
| | | | கே. |
| செ. | டிசம்பர் 16உ காலை 9 மணிக்கு கிரக நிலை. | | குரு |
| | | | சந். |
| சூ. ரா. | பு. | சுக். சனி | |

<u>கிரகப் பெயர்ச்சிகள்:-</u>

டிச. 19உ தனுசுக்கு புதன்.
,, 28உ விருச்சிகத்திற்கு சுக்ரன்.
ஜன. 5உ மீனத்திற்கு செவ்வாய்.
,, 6உ மகரத்திற்கு புதன்.

மேஷ ராசி:- (அசுவனி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய) இலக்கினாதிபதி செவ்வாய் 11லிருப்பதாலும் சனியின் பார்வை சுகஸ்தானத்தில் விழுவதாலும் சுகத்திற்கு பங்கம். வாக்கினால் நஷ்டமும் மனஸ்தாபமும் சிலருக்கு ஏற்படும். வீடு, நிலம், வண்டி, வாகனம் இவைகளில் சத்ருத்வம் அதிகம் எனினும், ஜன. 3, 4 தேதிகளில் சத்ருக்கள் தோற்றுப்போவார்கள். தொழிலில் இன்னும் ஊக்கம் வந்தபாடில்லை. டிச. 15, 16, ஜன. 12, 13 தேதிகளில் பதவி சம்பளம் சார்பில் மேலதிகாரிகளைக்கண்டு பேசவேண்டாம். அசுவனி ந-பி-த, பாக்கியம் கம்மி, விரயம் அதிகம், தொழில்முடை, வீண் அபவாதங்கள் உண்டாம். பரணி ந-பி-த, பாக்கியம் உண்டு, தொழிலில் உற்சாகம், விரயம் கம்மி, வெகுஜனப்ரீதி ஏற்படும். அதிர்ஷ்ட நாட்கள்:- டிச. 19, 20, 31, ஜன. 2, 3, 7, 9, 10 தேதிகள். சந்திராஷ்டமம்:- டிச. 22உ புதன் காலை முதல் 24உ வெள்ளி மாலை 6 மணி வரை உண்டு.

விருஷப ராசி:- (கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகணி, மிருகசிரிஷம் 2-ம் பாதம் முடிய) இலக்கினாதிபதி சுக்கிரன் ஜன. 1உ முதல் யோககாரகனின் வீதியில் சஞ்சரிப்பதால், அன்றுமுதல் இவர்களுக்கு யோகமும் வாக்கு நாணயமும் கீர்த்தியுமாய் நடக்கும். பந்து மித்திரர்கள் பகைமை பாராட்டுவார்கள். ஜன. 2-வது வாரத்தில் புத்திரர்களுக்கும் பீடைகள் உண்டு. ஜன. 5, 6 தேதிகளில் சத்ருக்கள் பணிந்துவிடுவார்கள். டிச. 17, 18, 19உகளில் பதவி, சம்பளம் சார்பில் மேலதிகாரிகளை பேட்டிகண்டு பேசுதல் கூடாது. தொழிலில் மிகுந்த உற்சாகமும் நலமும் உதவியும் பெருகும். கிருத்திகை ந-பி-த, அதிர்ஷ்டம் கம்மி, களத்திர சுகம் உண்டு. கைக்குக் கிடைத்தது வாய்க்கு எட்டாமற்போகும். ஆனால் தொழில் விருத்தி உண்டு. ரோகணி ந-பி-த, அதிர்ஷ்டம் உண்டு; தொழில் விருத்தியாகும்; தொட்டது துலங்கும், எடுத்தது உயரும், கருதியது நிறைவேறும், சுகமே வளரும். மிருகசீரிஷம் ந-பி-த, தொழிலில் முடை அதிகம், விதண்டாவாதம் பண்ணி ஏமாறுவார்கள், பிறர்க்கு உபகாரம் செய்பவர் போலக்காட்டி ஏமாற்றுவார்கள்; சுப்பிரமண்யக் கடவுளை ஆராதித்து வழிபடவும். அதிர்ஷ்ட நாட்கள்:- டிச. 19, 20, 22, 31, ஜன. 7, 9, 10 தேதிகள். சந்திராஷ்டமம்:- டிச. 24உ வெள்ளி மாலை

ந — பி — த = நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு.

6 மணி முதல் 26உ ஞாயிறு முடியவும் உண்டு.

---

மிதுன ராசி:- (மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் முடிய) இலக்கினாதிபதி புதன் சப்தமகேந்திரத்திலிருப்பதால், டிச. 19உ முதல் நாணயமும், களத்திர சுகமும், வியாபாரமும், சம்பத்தும் அதிகரிக்கும். வண்டி, வீடு, நிலம் முதலியவற்றில் முற்போக்கும் நன்மையும் ஏற்படும். சில சமயம் இவர்கள் பேசினால், அது க்ஷேமமாயிருப்பதல்லாமல் பிறர் மனத்திற்குப் புண்படுத்தவும் செய்யும். புத்திர பீடை இன்னும் உண்டு. களத்திரத்திற்கு அடிக்கடி சுகவீனம் ஏற்படவும் கூடும். தொழில் மும்முரமாய் நடைபெறும். டிச. 19, 20, 21 தேதிகளில் மேலதிகாரிகளுடன் அல்லது யஜமானர்களுடன் பேட்டி வைத்துக் கொள்ளக்கூடாது. ஜனவரி 7, 8 தேதிகளில் எதிரிகள் அடிபணிவார்கள். அதிர்ஷ்ட நாட்கள்:- டிச. 19, 20, 22, 31, ஜன. 2, 3, 10 தேதிகள். சந்திராஷ்டமம்:- டிசம்பர் 27உ திங்கள் காலைமுதல் 29உ புதன் பகல் $1\frac{1}{2}$ மணிவரை உண்டு. திருவாதிரை ந-பி-து, தேக சௌக்கியத்திற்குக் குறைவில்லை; வண்டி, வீடு, நிலம் முதலியவற்றில் ஜனவரி முதல் வாரத்தில் முற்போக்குண்டு; சத்துருக்களை ஜயிப்பார்கள்; களத்திரத்திற்கு வாதரோக நோய் வந்தாலும் சீக்கிரம் விலகும்; பெரிய உதவி கிடைக்கும் போலிருந்து தடைப்படும். புனர்பூசம் ந-பி-து, ஏமாற்றங்களும், கஷ்டங்களும், அல்லல்களும் அதிகமெனலாம். தக்ஷிணாமூர்த்தியையும் சனீஸ்வர பகவானையும் மறக்காமல் பூஜை, அர்ச்சனைகள் செய்யவும். ஏதாவது ஒருசொல் பேசிவிட்டால், அதனால் கப்பலே மூழ்கிவிடும் போன்ற மனஸ்தாபமும் நேச பங்கமும், மனச் சஞ்சலமும் அளவுகடந்து போகும்; மிக்க எச்சரிக்கையுடன் வாழ்க்கை நடத்த வேண்டும்; ஊசி முனையில் நடப்பது போன்ற கஷ்ட நஷ்டமும் ஏற்படலாம். ஜாக்கிரதை.

---

கடக ராசி:— (புனர்பூசம் கடைசி பாதம்முதல் பூசம், ஆயிலியம்முடிய) இலக்கினத்தில் குரு இருப்பதால் சுகத்திற்குச் சில சமயம் ஹானி உண்டாகும். அஷ்டமாதிபதியின் பார்வை ஏற்பட்டிருப்பதால், பலவித கஷ்டங்களுக்குப் பாத்திரம் ஆவார்கள். டிச. 28-ம் தேதிக்குள் வண்டி, வீடு, வாகனம், நிலம் இவைகளில் முற்போக்கும், லாபமும், ஆதரவும் ஏற்படும். கண்டச்சனி விலகவில்லை. சனீஸ்வர பகவானை வழிபடவும். 1-ல் குரு பொல்லாதவர். தக்ஷிணாமூர்த்தியையும் வணங்கவும். தொழிலில் வேகம் உண்டு. ஆனால் லாபம் நிதானம். டிச. 22, 23, 24 தேதிகளில் பதவி, சம்பளம் சார்பில் மேலதிகாரிகளைப் பேட்டி கண்டு பேசுதல் கூடாது. ஜனவரி 9, 10 தேதிகளில் சத்துருக்கள் மண்ணைக் கவ்வுவார்கள். அதிர்ஷ்ட நாட்கள்:- டிச. 19, 20, 22, ஜன. 2, 3, 7 தேதிகள். சந்திராஷ்டமம்:- டிச. 29உ புதன் பகல் $1\frac{1}{2}$ மணிமுதல் 31உ வெள்ளி காலை 7 மணிவரை உண்டு. பூசம் ந-பி-து, கண்டச்சனியின் கஷ்டங்கள் ஓரளவு குறையும்; சத்துருக்களை ஜயிப்பார்கள்; கடன் உபாதைகள் தீரும். ஜன. 1-ம் தேதிமுதல் பணப்ராப்திகள் உண்டு; களத்திரத்திற்குப் பீடைகள் உண்டாகி விலகலாம்; ஜன. 8-ம் தேதி பகல் 12 மணிக்குமேல் 9-ம் தேதி ஞாயிறு



காலை 10 மணிக்குள் சத்துருக்கள் மூலம் சில எதிர்பாராத லாபங்கள் ஏற்படும்; இதனால் மனம் சந்தோஷமடையும்; டிச. 19, 20 தேதிகளில் களத்திர வர்க்கத்தாரால் சில எதிர்பாராத நன்மைகள் உண்டாகலாம். ஆயிலிய ந-பி-து, கண்டச்சனியின் கஷ்டங்களும், ஜன்மகுருவின் குரூரங்களும் ஓரளவு விலகும்; டிச. 25-ம் தேதிக்குள் பணப்ராப்திகள் உண்டாகும்; டிச. 22-ம் தேதிக்குமேல் வண்டி, வாகனம் இவற்றில் லாபமும், தொழில் விருத்தியும் உண்டு; செலவுகள் அபாரமாய்ப் பெருகும்; வாழ்க்கையில் சுகமும், இன்பமும் பெருகும்; இதனால் மனக்கோட்டை அதிகம் கட்டுவார்கள்; அதுதான் கூடாது; சனியின் பார்வை இருப்பதால், திடீர் திடீரென்று மனம் கீழ்நிலையில் தாவும். எச்சரிக்கையுடன் இருக்கவும்.

---

சிம்ம ராசி:- (மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய) இலக்கினாதிபதி பஞ்சமத்திலிருப்பதால் மனம் நிம்மதி அடையும் என்றாலும், சனியின் பார்வை இருப்பதால் புத்திரபீடை உண்டு. இளைய சகோதர லாபம் கிடையாது. வண்டி, வீடு, நிலம் இவற்றில் அனுகூலமும், முற்போக்கும் உண்டு. களத்திரத்தின் மூலம் விதவிதமான உபகாரங்களும் ஒத்தாசைகளும் கிடைக்கும். தொழிலில் அவ்வளவு மும்முரமான யோகம் கிடையாது; சுமார் பலன் உண்டு. ஞான மார்க்கமான பேச்சுக்களில் சிலர் பிடிவாதமாய் ஈடுபடுவார்கள். டிச. 15, 16, ஜன. 11, 12, 13 தேதிகளில் எதிரிகளை முறியடிப்பார்கள். டிச. 25, 26, 27 தேதிகளில் பதவி, சம்பளம் சம்பந்தமாய் யஜமானர்களுடனோ, மேலதிகாரிகளுடனோ பேச்சு வைத்துக்கொள்ளலாகாது. அதிர்ஷ்ட நாட்கள்:- டிச. 19, 20, 22, ஜன. 3, 7 தேதிகள். சந்திராஷ்டமம்:- டிச. 31உ வெள்ளி காலை 7 மணி முதல் ஜன. 2உ ஞாயிறு இரவு $11\frac{1}{2}$ மணிவரை உண்டு. மகம் ந-பி-து, செலவுகள் கட்டுக்கடங்காமல் ஓடும் குதிரையைப்போல அதிகரித்து வருவதைச் சமாளிக்கவும்; தக்ஷிணாமூர்த்தியை மறக்கவே கூடாது; கண்டச்சனியின் கஷ்ட நஷ்டங்கள் அபாரமாய் மனதை வாட்டி வதைக்கும்; சனீஸ்வர பகவானை அர்ச்சனை செய்யவும்; ஜன. 9-ம் தேதி ஞாயிறு முதல் 10-ம் தேதி திங்கள் வரை புத்திரர்களில் ஒருவர்க்கு நோய் நிவாரணத்திற்காக வைத்திய சிகிச்சை செய்வதால் பணச் செலவுகள் ஏற்படும்; வேறு செலவுகளும் உண்டாகலாம்; பணமுடை இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. பூரம் ந-பி-து, சனியின் தொல்லை கம்மியேதான்; ஜன. 2-வது வாரத்திலிருந்து பணக்கஷ்டம் விலகும்; புத்திர களத்திர சுகமும், ஐக்கியமும் ஒற்றுமையும் அதிகரிக்கும்; ஜன. 1-ம் தேதிவரை நல்ல லாபமும், முற்போக்கும் தொழிலில் ஏற்படும்; அதற்குமேல் சில தொந்தரவுகள் கிளம்பும். எச்சரிக்கையுடன் இருக்கவும்.

---

☞ இராகுகாலம் எவ்வளவு கெட்டதோ, அவ்வளவு கெட்டவை சந்திராஷ்டம நாட்கள். சுபகாரியங்களையும் புது முயற்சிகளையும் இக்காலங்களில் முற்றிலும் நீக்கவும். பெண்கள் நகை, புது ஆடை முதலியன சந்திராஷ்டம காலங்களில் அணிதல் கூடாது. இவைகளை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு இவற்றின்படி அனுஷ்டிக்கவும். — ஆசிரியர்.

கன்னியா ராசி:- (உத்திரம் 2-ம் பாதம்முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம்முடிய) இலக்கினாதிபதி புதன் அஸ்தமித்திருப்பதால், அனுகூலங்கள் கொஞ்சம் குறைவே எனலாம். சக்தியற்ற நிலையில் தத்தளிக்கிற காலங்கள் வரவும் செய்யும். லாபத்தில் குரு இருந்தும் சனி பார்வை பெறுவதால், அனுகூலம் செய்யக் கூடாமற்போகிறது. டிச. 28-ம் தேதிக்குள் குடும்பத்தில் ஒற்றுமையும், சுக க்ஷேமங்களுக்குக் குறைவில்லை. வண்டி, வீடு, நிலம் இவைகளில் பிரதிகூலம் தவிர அனுகூலமில்லை. புத்திர பீடைகள் உண்டாகி விலகும். தொழிலில் மும்முரம் கிடையாது. பகைமையும், பொறுமையும் ஏற்படும். டிச. 17, 18, 19 தேதிகளில் பகைவர்கள் படுதோல்வி அடைவார்கள். டிச. 27, 28, 29 தேதிகளில் பதவி, சம்பளம் சம்பந்தமான பேச்சுக்களையே எடுக்கலாகாது. அதிர்ஷ்ட நாட்கள்:- டிச. 19, 20, 22, 31, ஜன. 7, 9, 10 தேதிகள். சந்திராஷ்டமம்:- ஜன. 2உ ஞாயிறு இரவு 11½ மணிமுதல் 4உ செவ்வாய் முடியவும் உண்டு. உத்திரம் ந-பி-து, தொட்ட காரியங்களில் தடங்கல்களும், தடைகளும் ஏற்படும்; சுகபோகங்களுக்காகச் செய்யும் காரியங்களில் அபாரமான செலவுகள் உண்டாகும்; பணமுடை கொஞ்சமே; சந்திராஷ்டம காலங்களில் இவர்களில் சிலருக்குக் கடன் உபாதைகளால் அலைச்சலும், நிஷ்டூரமும் ஏற்படும். அஸ்தம் ந-பி-து, குரு, சனி சாதக நிலையிலிருக்கின்றனர்; 2-ம் பாதத்தில் பிறந்தவர்களுக்கு மட்டும் சனி பல கஷ்டங்களைக் கொடுக்கும்; டிச. 28-ம் தேதிவரை பணப்ராப்திகள் உண்டு; சித்திரை ந-பி-து, வண்டி, வாகனங்களில் பிற்போக்கும், தொழில் மந்தமும் உண்டு; இந்நிலையைச் சாமர்த்தியமாகச் சமாளித்துக்கொள்வார்கள்; களத்திர அந்நியோன்னியத்தில் மாறுதல் கிடையாது; சந்தோஷ வாழ்க்கைக்குத் தடை இல்லை.

---

துலா ராசி:- (சித்திரை 3-ம்பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் முடிய) இலக்கினாதிபதி சுக்கிரன் டிச. 28-ம் தேதி விருச்சிகத்திற்குப் போகிறபடியால், அதுவரை தேக சுகத்திற்கும், குடும்ப ஒற்றுமைக்கும், களத்திர சுக லாபத்திற்கும் குறைவில்லை. இளைய சகோதரர்களிடமிருந்து அற்ப சொற்ப உபகாரம் வரலாம். வண்டி, வீடு, நிலம் இவற்றில் அனுகூலமும், லாபமும் இல்லை. சத்துருக்களின் தொல்லை அதிகம்; கடைசியில் வெற்றி உண்டு. பந்து மித்திரர்களிடமிருந்து துர்ச்செய்திகள் கிட்டும். களத்திர பீடை உண்டு. தொழிலில் முடை உண்டு. 7½ நாட்டுச்சனியில் 2-வது கூறு; சனீஸ்வர பகவானை மறக்கலாகாது. டிச. 20, 21 தேதிகளில் பகைவர்கள் அபஜயமடைவார்கள். டிச. 29, 30, 31 தேதிகளில் பதவி, பட்டம், உத்தியோக சம்பந்தமான முயற்சிகளில் பேச்சு வார்த்தை தொடங்கலாகாது. அதிர்ஷ்ட நாட்கள்:- டிச. 22, 31, ஜன. 2, 3, 9, 10 தேதிகள். சந்திராஷ்டமம்:- ஜன. 5உ புதன் காலை முதல் 6உ வியாழன் முடியவும் உண்டு. சுவாதி ந-பி-து, தேகாரோக்கியக் கெடுதலும், எதிர்பார்த்தவை நடைபெறாமையும், எதிர்ப்புகள் பலமாய் உண்டாதலும் ஏற்படும்; களத்திர சுகத்திற்கும், ஒற்றுமைக்கும் குறைவில்லை. விசாகம் ந-பி-து, மிக்க கஷ்ட பலனென்றே கூறலாம்: சனியின் அட்டூழியங்கள் பலமாகி வதைக்கும்; பந்து மித்திரர்களிடமிருந்து பலவிதமான



அபாயகரச் செய்திகள் கிட்டும்; மனைவிக்குப் பீடை கிடையாது.

---

விருச்சிக ராசி:- (விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய) இலக்கினாதிபதி செவ்வாய் கும்பத்தில் சஞ்சரிக்கிறபடியால், வண்டி, வாகனம், வீடு, நிலம் இவைகளில் முற்போக்கும், உதவியும் கிடைக்கும். பண முடை உண்டு. புத்திர பீடைகள் விலகிவிட்டன. களத்திர சுகமும், ஒற்றுமையும் ஏற்படும். தொழிலில் மும்முரமான முற்போக்குப் பெருக்கமும் உண்டாகும். லாபம் அதிகம் இல்லாவிட்டாலும் சுமாரான யோகமுண்டு. டிச. 22, 23, 24 தேதிகளில் எதிரிகளின் கை ஒடுங்கிவிடும். டிச. 31, ஜன. 1, 2 தேதிகளில் சம்பளம், பதவி விஷயமான பேச்சுக்களில் ஈடுபடலாகாது. 7½ நாட்டுச்சனியில் முதல் கூறு இது. சனீஸ்வர பகவானை மறக்காமல் ஆராதனை செய்க. அதிர்ஷ்ட நாட்கள்:- டிச. 22, 31, ஜன. 2, 3, 10 தேதிகள். சந்திராஷ்டமம்:- ஜன. 7உ வெள்ளி காலை முதல் 8உ சனி முடியவும் உண்டு. அனுஷம் ந-பி-து, பணப்ராப்திகள் உண்டாகலாம்; டிச. 28-ம் தேதி முதல் தொழில் மும்முரமாய் நடைபெறும்; லாபமும் கிடைக்கும்; புத்திர தோஷமில்லை; களத்திர ஒற்றுமை உண்டாகும். கேட்டை ந-பி-து, பணப்ராப்திகள் உடனுக்குடன் உண்டு; தொழில் மிக்க பெருக்கத்துடன் நடைபெறுது; புத்திர களத்திர சுகம் உண்டு; பந்துமித்திரர்களின் ஆதரவு கிடைக்கும்.

---

தனூர் ராசி:- (மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் முடிய) இலக்கினாதிபதி குரு பகவான் எட்டிலிருந்தாலும் தனது பாதத்தில் வக்ரீயாகச் சஞ்சரிப்பதால், வாக்கு நாணயமும், கீர்த்தியும், சரீராரோக்கியமுமாய் இருக்கும். ஜன. 5-ம் தேதிமுதல் வண்டி, வாகனம், வீடு, நிலம் முதலியவற்றில் அமோகமான முன்னேற்றமும், உதவியும், லாபமும் கிடைக்கும். தொழில் மந்தம். டிச. 25, 26 தேதிகளில் பகைவர்களின் பலம் ஒடுங்கத்தான் செய்யும். ஜன. 3, 4 தேதிகளில் மேலதிகாரிகளுடனோ, யஜமானர்களுடனோ பதவி, சம்பளம் விஷயமான பேச்சுக்களில் ஈடுபடலாகாது. அதிர்ஷ்ட நாட்கள்:- டிச. 19, 20, 31, ஜன. 2, 3, 7 தேதிகள். சந்திராஷ்டமம்:- ஜன. 9உ ஞாயிறு காலை முதல் 11உ செவ்வாய் காலை 7½ மணி வரை உண்டு. மூலம் ந-பி-து, குடும்பத்தில் கலகமும், வாக்கினால் விவகாரமும், பந்துமித்திர விரோதங்களும், களத்திர பீடைகளுமாய் நடக்கும்; தக்ஷிணாமூர்த்திக்கும் சனீஸ்வர பகவானுக்கும் வழிபாடு நடத்தினால் துஷ்ட பலன்கள் மாறலாம். பூராடம் ந-பி-து, குடும்பத்தில் மனைவி மக்களோடு நேர்மையும், பண வரவும், பந்துமித்திர நேர்மையும், தொழில் முடையுமாய் நடைபெறும்; டிச. 28-ம் தேதி முதல் உஷ்ணாதிக்க நோய்கள் பீடிக்காமல் எச்சரிக்கையாயிருக்கவும்; ஷை தேதி முதல் தொழில் மிக மந்தமாயிருக்கும்; சிலவுகள் அதிகமாகும்.

---

மகர ராசி:- (உத்திராடம் 2-ம் பாதம் முதல் திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் முடிய) இலக்கினாதிபதி சனி 10-ல் உச்சராசியிலிருந்தும், திருதிய விரயாதிபதியின் கதியில் ஓடுவதால், டிச. 28-ம் தேதிவரை எவ்வளவு பணம் வந்தாலும் செலவாகும். வண்டி, வீடு, நிலம் இவற்றில் சுமாரான யோகம் உண்டு.

டிச. 28-ம் தேதிக்குமேல் தொழிலில் மந்தம் ஏற்படலாகும். டிச. 27, 28, 29 தேதிகளில் சத்ருக்கள் தோற்றுப் போவார்கள். ஜன. 5, 6 தேதிகளில் பதவி, சம்பளம் சம்பந்தமான பேச்சுக்களில் ஈடுபடலாகாது. அதிர்ஷ்ட நாட்கள்:- டிச. 19, 20, 22, 31, ஜன. 2, 7, 9, 10 தேதிகள். 2 சந்திராஷ்டமங்கள்:- டிச. 14உ செவ்வாய் இரவு 9 மணி முதல் 16உ வியாழன் வரையும், ஜன. 11உ செவ்வாய் காலை 7½ மணிமுதல் 13உ வியாழன் பிற்பகல் 2 மணிவரையும் ஆக 2 சந்திராஷ்டமங்கள் உண்டு. உத்திராடம் ந-பி-து, தொட்ட காரியங்கள் தடைப்பட்டு நடப்பதும், செலவுகள் அதிகரிப்பதும், பணமுடை ஏற்படுவதும், தொழில் மந்தமும் உண்டாகும். திருவோணம் ந-பி-து, செலவுகள் அதிகப்படும்; களத்திரத்திற்கு பீடைகள், நோய்கள் கண்டு பரிகாரத்தால் விலகும்; திடீர் தனப்ராப்திகள் இல்லை; டிச. 22-ம் தேதிக்குமேல் பந்துமித்திரர்களிடமிருந்து நற்செய்திகள் கிடைக்கும்; பூமி லாபமும் உண்டு.

---

கும்ப ராசி:- (அவிட்டம் 3-ம் பாதம் முதல் சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் முடிய) இலக்கினாதிபதிக்கு சுக பாக்கியாதிபதி சேர்க்கையாயிருக்கிற டிச. 28-ம் தேதி வரை வண்டி, வீடு, நிலம் இவைகளில் முற்போக்கும், தனலாபமும் உண்டாகும். சென்றவிடமெல்லாம் பாக்கியமும், யோகமும் ஏற்படும். தன லாபாதிபதி 6-ல் இருப்பதால், தனலாபம் குறைவு எனலாம். புத்திர பீடைகள் உண்டு. களத்திரத்திற்கு உஷ்ணாதிக்க நோய்கள் வாராமற்பார்த்துக்கொள்க. தொழில் டிச. 28-ம் தேதிவரை நன்றாய் நடக்கும். டிச. 29, 30, 31 தேதிகளில் சத்ருக்கள் தோற்று வீழ்வார்கள். ஜன. 7, 8 தேதிகளில் மேலதிகாரிகளுடன் சம்பள விஷயமாய்ப் பேசக்கூடாது. அதிர்ஷ்ட நாட்கள்:- டிச. 22, 31, ஜன. 2, 3, 7, 9, 10 தேதிகள். 2 சந்திராஷ்டமங்கள்:- டிச. 17உ வெள்ளி காலை முதல் 19உ ஞாயிறு மாலை 6 மணி வரையும், ஜன. 13உ வியாழன் பிற்பகல் 2 மணிமுதல் 15உ சனிக்கிழமைவரையும் ஆக 2 சந்திராஷ்டமங்கள் உண்டு. அவிட்டம் ந-பி-து, பண முடையும், புத்திர பீடையும், லோபத்தனமும், ஜன. 1-ம் தேதி வரை பந்துமித்திர சேர்மையும் உண்டாகும். சதயம் ந-பி-து, பணப்ராப்திகளும், புத்திர ஒற்றுமையும், பந்துமித்திரர்கள் ஒற்றுமையும், தொழிலில் அனுகூல லாபங்களும் உண்டாகும். பூரட்டாதி ந—பி—து, தொழில் மிக மந்தமாயிருக்கும்; பணமுடை அபாரம்; புத்திர பீடைகள் உண்டு; பிடிவாதத்தால் நஷ்ட கிஷ்டங்கள் உண்டாகும்; எச்சரிக்கை!

---

மீன ராசி:- (பூரட்டாதி 4-ம் பாதம்முதல் உத்திரட்டாதி, ரேவதி முடிய) இலக்கினாதிபதி குரு பகவான் பஞ்சமத்தில் தனது கதியில் சஞ்சரிப்பதால், புத்திர சுகமும், தொழில் முன்னேற்றமும், தன தான்ய சம்பத்துக்களுமுண்டாகும். லாபம் கம்மி. எதிரிகள் பிடிவாதம் பண்ணுவார்கள். வீடு, வண்டி, பூமி இவைகளில் எதிர்ப்புகளும், இடையூறுகளும் உண்டு. களத்திர பீடை உண்டு. விவகார விஷயங்களில் கிஷ்டேம் உண்டாகும். ஜன. 1, 2 தேதிகளில் பகைவர்கள் பணிந்து வருவார்கள். ஜன. 9, 10, 11 தேதிகளில் மேலதிகாரிகளுடன் அல்லது யஜமானர்களுடன் சம்பள விஷயமாய் பேச்சு எடுக்கலாகாது.

# மதிப்புரை.

☞ மதிப்புரைக்கு 2 பிரதிகள் அனுப்பவேண்டும்.

## "நான் — கடவுள்"

"நான் என்ற ஒரே ஒரு பொருள் ஒரு பொருளாய் இருந்தபோது ஒரு செயலும், இல்லாதிருந்தாலும் அந்த ஒரே பொருள் அநேக பொருளாகவும், செயல்களாகவும் வேறுபட்டபோது கடவுள் என்று அதற்குப் பெயர் ஏற்படலாயிற்று. அதன் விளக்கத்தை இந்நூல் அறிவிப்பதால் இந்நூலுக்கு "நான் — கடவுள்" என்று பெயர் அமைந்துள்ளது" என்று இந்நூலை இயற்றிய தத்துவஞானி பரஞ்ஜோதி மகான் எழுதுகிறார்கள்.

உலக அமைதிக்குக் கருத்தடை அவசியம் என்றும், இதைச் சட்ட மூலமாக ஏற்படுத்தவேண்டுமென்றும் ஆசிரியர் வற்புறுத்துகிறார். கருத்தடை மருந்து செய்யும் முறை தரப்பட்டுள்ளது. மக்களுடைய எண்ணங்களாகிற அணுக்களின் அலைகள்தான் உலகில் பெருவாரியான நோய்களின் உற்பத்தி செய்வதற்குக் காரணமாயிருப்பதால், ஒவ்வொருவரும் தூய எண்ணங்களை எண்ணுவதால் வியாதிகளை உலகிலிருந்து ஓட்டக் கூடுமென்று நமது மகான் போதிக்கிறார்கள். அருமையான இந்நூலின் விலை ரூ. 3.

கிடைக்குமிடம்:-

உலக சமாதான ஆலயம், பரிபூரண பரஞ்ஜோதியின் உயர்ஞான சபை,
299, திருவொற்றியூர் ஹைரோட், புது வண்ணாரப்பேட்டை, சென்னை-21.

---

## எதிர்கால 2 கேள்விகளுக்கு நான்கணா. (மௌன ஆருடம்)

10—8—51உ முதல் ஞானகுரு ஆசிரியர் தினசரி காலை 6 மணி முதல் 9 மணிவரை மௌனமாயிருந்து வருவதால், அப்போது 1 அல்லது 2 கேள்விகள் எழுதப்பட்ட காகிதத்தைக் கொடுத்தால், உடனுக்குடன் பதில் எழுதிக்கொடுப்பார். முற்றுமுணர்ந்த முனிவர்களும் துதிக்கின்ற முருகக்கடவுளின் திருவருள் உபாசனா சக்தியால், ஆங்கில நூலிலிருந்து திரட்டி எழுதப்படும் விடைகள் அநுபவபூர்வமாய்ச் சரியாயமைகின்றன. கட்டணம் நான்கணாதான். நேரில் வரவேண்டும்.

☞ திருடனின் பெயர், களவு போன சாமானின் விபரம், ஆயுள், தொழில் விபரம் முதலியவைபற்றி கேள்விகள் கேட்கக்கூடாது.

ஆசிரியர், "ஞானகுரு" காரியாலயம், 5, கான்பாளையம் 3-வது தெரு,
கீழவெளி வீதி, மதுரை. (S. I.)

---

அதிர்ஷ்ட நாட்கள்:- டிச. 22, 31, ஜன. 2, 3, 7, 9, 10 தேதிகள். சந்திராஷ்டமம்:- டிச. 19உ ஞாயிறு மாலை 6 மணிமுதல் 21உ செவ்வாய் முடியவும் உண்டு. உத்திரட்டாதி ந-பி-து, பணப்ராப்திகள் உண்டு: தொழிலில் முற்போக்கும் லாபமும் உண்டாகும்; தடைகள் ஏற்படுவது போலத்தோன்றி விலகும். ரேவதி ந-பி-து, நல்ல அதிர்ஷ்டம் உண்டு; சென்றவிடமெல்லாம் சிறப்பு. டிச. 19-ம் தேதிமுதல் 27-ம் தேதிவரை களத்திரத்தின் மூலமாக அனுகூலங்களும், நன்மைகளும் உண்டாகும்; தொழில் முன்னேற்றத்திற்கும், விஸ்தரிப்புக்கும் தடை கிடையாது.

ஞானகுரு காரியாலயத்திலுள்ள போட்டிப்பெட்டியில் உங்கள் விடைகளை போடலாம்
பிரவேசக் கட்டணமில்லை! அச்சுக்கூப்பனும் கிடையாது!!
ஒரே ஒரு விடை இனும்! உங்கள் அதிர்ஷ்டத்தைப் பரீக்ஷியுங்கள்!!

## ஞானகுரு முருகன் திருவருள் ஆறு எண்கள் கூட்டல் போட்டி-1.

## பரிசு 6,000 — புண்ணிய அதிர்ஷ்ட அணுக்கள்!

*[ரொக்கம் ரூ. 1.]*

—: முடிவு தேதி:- 30—12—54ஃ குருவாரம் மாலை 6 மணி :—

**1—2—3—4—5—6** — இந்த **6** எண்களை மட்டும் இடமிருந்து வலம் எப்படியேனும் மாற்றி எழுதலாம். கூட்டுத் தொகை **21** வரும். இதுவே ஒரு விடை ஆகும்.

நிபந்தனைகள்:— (1) சிறுவர் முதல் பெரியோர் வரை, ஆண் பெண் உள்பட ஒருவர் ஒரு விடை மட்டும் தனிக் காகிதத்திலோ, தபால் கார்டிலோ பெயர் விலாசத்துடன் மையினுல் எழுதி அனுப்பவும். கட்டணமில்லை. பலர் சேர்ந்து தங்கள் விடைகளை ஒரே கவரில் வைத்து அனுப்பலாம். (2) ஞானகுரு வருடச்சந்தாதார் ஒரு விடை எழுதி அனுப்பினுல், அது 6 போட்டிகளுக்குச் செல்லுபடியாகும். அதற்குள் பரிசு கிடைத்தால், உடனே புதிய விடை எழுதவேண்டும். (3) 30—12—54ஃ இரவு 7 மணிக்கு ஞானகுரு காரியாலயத்தில் திருவுளச்சீட்டுக்கள் மூலம் சரியான விடை நிர்ணயிக்கப்படும். பல சரியான விடைகளுக்கு புண்ணிய அதிர்ஷ்ட அணுக்கள் பகிர்ந்தளிக்கப்படும். புண்ணிய அதிர்ஷ்ட அணுக்களைக் கண்ணுல் பார்க்க இயலாது; உள்ளங்கனிந்த கருத்துடன் போட்டி நேயர்களுக்கு வழங்கப்படும் ஞானகுரு முருகன் திருவருள் பிரசாதப் பரிசு இது. (4) 6—1—55ஃ குருவாரம் இரவு 7 மணிக்கு பல சரியான விடைகளுள் ஒன்று திருவுளச்சீட்டாக எடுக்கப்படும். அதன் விலாசத்திற்கு 13—1—55ஃ குருவாரம் ரூபாய் ஒன்று மணியார்டர் செய்யப்படும். (5) இப்போட்டியின் சரியான விடை, பரிசு பெற்றவர்கள் ஜாபிதா 14—1—55ஃ ஞானகுரு பொங்கல் மலரில் வரும். விலை 4 அணு. ஸ்டாம்புகள் கூடா. ஐந்தணு M. O. செய்வோர் விடையை M. O. கூபனிலேயே எழுதலாம். (6) தபாலில் தவறும் விடைகளுக்கு மானேஜர் ஜவாப்தாரியல்ல. இப்போட்டி சம்பந்தமான சகல விஷயங்களுக்கும் மானேஜர் தீர்ப்பே முடிவானது.

மானேஜர், ஞானகுரு காரியாலயம், (ஆறு எண்கள் போட்டி-1)
5, கான்பாளையம் 3-வது தெரு, கீழவெளி வீதி, மதுரை. (S. I.)

☞ ஆங்கில விலாசத்தை கவர் மேல் ஒட்டி அனுப்பலாம்.

Manager, GNANAGURU MURUGAN Six Numbers
Competition No-1,
5, Khanpalayam 3rd Street, MADURAI. (S. I. R.)

**ஒரு பத்தி ஒரு அங்குல விளம்பரங்கள்:** தடவைக்கு அங்குலம் ரூ. 2.


எல்லாவித கைத்தறிகளுக்கு வேண்டிய உயர்தரமான அச்சு, விழுது, நாடா, தார்குச்சி முதலிய நெசவு சாமான்கள் கிடைக்குமிடம்:
சக்தி டெக்ஸ்டைல்ஸ் ஏஜன்ஸி,
87A, கீழவாசல், மதுரை.

எல்லாவிதமான பல்புகள் மற்றும் எலக்ட்ரிக் சாமான்கள் கிடைக்குமிடம்:
**பாப்புலர்**
**எலக்ட்ரிக் கம்பெனி,**
67, மஞ்சணக்காரத் தெரு, மதுரை.

*தப்பாளி*
**T. S. ராதாகிருஷ்ணய்யர் & கோ.,**
சூரத், ஜான்னடி & பிரிண்டிங் ஜவுளி தயாரிப்பவர்கள்
சாயத்திற்கு உத்திரவாதம்.
203, கீழவெளிவீதி, மதுரை.

**M.A.K. வெங்கட்ராமன் செட்டியார்,**
**ஜோதி ஐயப்பன் பிராண்டு**
**சேமியா பாக்டரி,**
13, எழுகடல் அக்கிராரம்,
மதுரை.

சிற்றுண்டிகளுக்கு சிறந்த இடம்
**"நாராயண"**
ஸ்வீட், காரம், காபி & டீ ஸ்டால்,
80, தெற்குமாசி வீதி, மதுரை.




**ஆர். எம். எஸ். & சன்ஸ்,**
பேக்கரி, டவுன்ஹால் ரோடு, மதுரை.

ரெடிமேட் ஆடைகளும் மில் ஜவுளிகளும் விலை சகாயமாய்க்கிடைக்கும்.
**"பிரபாத்" ரெடிமேட் ஸ்டோர்,**
2, அம்மன் சன்னதி, மதுரை.

**ராமியா**
**ஸ்ரீ மீனுக்ஷி ஸ்டோர்,**
புதுப்பட்டு & நூல் ஜவுளி வியாபாரம், விலை மலிவு. சாயத்திற்கு உத்திரவாதம்,
26, மஹால் 4-வது தெரு, மதுரை.

**"TARZO" PRODUCTS.**
★ பவுண்டன் பேனு இங்க்
★ சீல் அரக்கு
★ நீலகிரி தைலம்
★ டார்ஜோ பற்பொடி
வாங்கி உபயோகியுங்கள்.

**N. G. கிருஷ்ணமாச்சாரி & பிரதர்ஸ்,**
சூரத், ஜான்னடி ஜவுளி தயாரிப்பாளர்கள்,
உத்திரவாதமுள்ள கெட்டிச்சாயம்.
34, கான்சாமேட்டுத் தெரு,
(நியூ சினிமா சமீபம்) மதுரை.

**காய்த்திரி ஸ்டோர்,**
புதுப்பட்டு & நூல்ஜவுளிவியாபாரம்,
விலை சகாயம் சாயத்திற்கு உத்திரவாதம்
31, மால் 5வது ஹனுமார்கோவில் தெரு,
— மதுரை. —

**P. S. A. சுந்தரகோபாலய்யர்,**
—: புரோப்ரைட்டர் :—
**சாந்தாராம் ஸ்டோர்ஸ்,**
நூதன புதுப்பட்டு & நூல் ஜவுளி வியாபாரம்,
2, லெக்ஷிமிபுரம் 1-வது தெரு, மதுரை.

## உங்கள் எதிர்கால பலன்கள். 3 கேள்விகளுக்கு பதில் எழுத ரூ. 1

1 முதல் 3 கேள்விகள் வரை, சுத்தமாக எழுதி அடியிற்கண்ட அச்சு கூபனுடன் ரூ. 1-க்கு போஸ்டல் ஆர்டர் வாங்கி அனுப்பவும். ரூ. மணியார்டர் செய்யலாம். வி. பி. கிடையாது. ஸ்டாம்புகள் கூடா.

ஜோதிஷ சாஸ்திர ரீதியாகப் பதில் எழுதி அனுப்பப்படும்.

☞ ஜாதகம் இல்லாதவர்கள், கடிதம் எழுதும் நேரத்தைக் குறிப்பிடவும்.

மானேஜர், "ஞானகுரு" பதிப்பகம், (3 கேள்விகள்)
5, கான்பாளையம் 3 வது தெரு, மதுரை. (S. I.)

207940

கூபனை இங்கே கத்தரிக்கவும்.

தேதி:- "ஞானகுரு" ஜோதிஷ அச்சுக்கூபன்.

பெயர் ..........
விலாசம் ..........
..........
ஊர், ஜில்லா ..........
தொழில் ..........
வயது .......... கையெழுத்து ..........

S. S. கிருஷ்ணமூர்த்தி,
வெள்ளை நூல் & பெயிண்ட்
வார்னீஷ் டிரைகலர் வியாபாரம்,
விலை சகாயமாய்க் கிடைக்கும்.
64, மஞ்சணக்காரத் தெரு,
மதுரை.

சகலவிதமான வியாதிகளுக்கும் சிறந்த
மலையாள ஆயுர்வேத மருந்துகள்
கிடைக்குமிடம்:—
மலையாள மெடிக்கல் ஹால், (Regd.)
189, வக்கீல் புதுத்தெரு,
(தபால் பெட்டி நெ. 27), மதுரை.

திருப்பரங்குன்றம்,
K. M. K.
கார்த்திகேயன் கம்பெனியின்
சந்தனாதி அரைக்கீரை விதை குளிர் தாமரை, மிளகாய் தைலங்கள் சுத்தமான என் எண்ணெயில் தயார் செய்தது. மற்றும் உள்ள வாசனை சாமான்களை உபயோகியுங்கள்.

"நெப்போலியன் கியூர்"
நிகரில்லாத வெட்டை ரோக நிவாரணி. ARTERIES நாடிகளில் துரிதமாகச் சென்று ரத்த சுத்தி செய்வதில் இணையற்றது.
சாந்தி வைத்திய நிலையம்,
250, கிருஷ்ணபுரம் 2 நிர். சந்த்ர
ராமநாதபுரம் ரோடு, மதுரை.

ஹிருஷிகேஸ், சுவாமி சிவானந்தரின் ஆங்கில நூல் மொழிபெயர்ப்புக

(1) சிவானந்தர் போதனை விளக்கம் அணா 6. (2) மௌன மதச் சின்னங்களும் ஞானமுத்துக்களும் அணா 12. ஷை 2 நூல்களும் விலை ரூ. 1. தபால் சிலவு அணா 8. ரூ. 1—8—0 M. செய்க. வி. பி. இல்லை. போஸ்டல் ஆர்டர், ஸ்டாம்புகள் கூட
"ஞானகுரு" பதிப்பகம், 5, கான்பாளையம் 3-வது தெரு, மதுரை. (S.

ஒரிஜினல்

# S. R. B.

ஆண்டுகள் மாறுகின்றன

இன்று இருப்பவை நாளை காணப்படுவதில்லை

நாகரீகமும் நாளுக்குநாள் முற்றிக்கொண்டே வருகிறது

அதற்கேற்ப

பட்டு புடவைகள், தாவணிகள்,
பாவாடைகள், ரவிக்கைகள்

இன்னும் அநேக பரிசு தினுசுகள்

அந்தந்த சீஸன்களுக்கேற்றபடி தருவிக்கப்படுகின்றன.

இவைகளெல்லாம்

நீடித்து உழைக்கக்கூடியவை : நிறம் மாருமலிருப்பவை
பார்க்கப் பரவசமளிப்பவை : உடுப்பதற்கு உற்சாகமளிப்பவை

☞ தேவைக்கு நேரில் வந்து பாருங்கள்.

## S. R. B.

முத்துப்புசாமி அய்யர் & சன்,

மதராஸ். ❖ ❖ மதுரை.

| | |
|---|---|
| 117, நயினியப்பநாயக்கன் தெரு,<br>மதராஸ்-3.<br>போன் 3506. | 280, கீழமாரெட் வீதி,<br>மதுரை.<br>போன் 36. |

Regd. No. M. 5664. "GNANA GURU" MONTHL


# ஈஸ்வர்லால் ஸ்டோர்ஸ்

[புரோப்ரைட்டர் ஸ்ரீ V. S. M. மோகன்ராம்]

15A, மால் வடம்போக்கித் தெரு, மதுரை.

★

எங்களிடம் கைத்தறியில் தயாரித்த

★ சேலை தினுசுகளும்

★ துண்டு ரகங்களும்

★ பெட்ஷீட் ரகங்களும்

இன்னும்

மதுரை நிட்டிங் கம்பெனி

சிங்க மார்க் பனியன் தினுசுகளும்

சகாய விலையில்

மொத்தமாகக் கிடைக்கும்.

முருகன் திருவருள் வேல் (வெள்ளி) ரூ. 6. முருகன் கவசம் ரூ

☞ ஜாதகம் கணிக்க, பிறந்த ஊர், வருஷம், மாதம், தேதி, மணி குறிப்பி

நேரில் ஜாதகம் பார்ப்பதில்லை. முழுத்தொகையும் அனுப்புக. வி.பி.கிடை.

(ஸ்தாபிதம் 1941 வருஷம்) உ. அலுவல் காலை 7–10, பிற்பகல்



# முருகன் ஜோதிஷ ஆஸ்ரமம்,

S. G. இராமலிங்கம், B.A., ஜோதிஷர், சொற்பொழிவா

இராஜயோகி, ஹிருஷிகேஸ், சுவாமி சிவானந்தரின்

சிஷ்யர் & "ஞானகுரு" மாதப்பத்திரிகையின் ஆசிரிய

"ஞானகுரு" ஆபீஸ், கான்பாளையம் 3, (கீழவெளிவீதி) மதுரை.

(1) ராசி நவாம்சத்துடன் ஜாதகம் கணிக்க ரூ. 5. இலக்கின ஸ் துடன் எழுத ரூ. 7. (2) நவக்கிரக ஸ்புடங்களுடன் எழுத ரூ. 15. (3 வர்க்கம், அஷ்டவர்க்கம், பாவச்சக்கரம் முதலியவைகள் பொதுப்பலன் டன் எழுத ரூ. 50. (4) எதிர்கால 1 முதல் 5 கேள்விகளுக்குப் எழுத ரூ. 2. 12 மாதப் பலன் எழுத ரூ. 5. ஜாதகம் அல்லது எழு நேரம் தேவை. (5) ஒரு ஜாதகத்திற்கு ஆயுள், களத்திரம், புத் யோகம், அவயோகம் மாதா பிதா கர்மம் முதலிய 6 அம்சங்களுக்கு எழுத ரூ. 10. ஷை ஒரு அயிட்டத்தை மட்டும் பரிகாரத்துடன் வி எழுத ரூ. 10. (6) எதிர்கால ஒரு திசைக்கு புக்திவாரி பலன் எழுத ரூ.

☞ முகூர்த்த நிர்ணயமும் விவாகப் பொருத்தங்களும் கவனிக்கப்படமா


Edited & Published by S. G. Ramalingam, B. A., and Printed at
Rajeswari Press, Palace Road, Madurai:–1954.